இப்படி 100 அல்லது 200 பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாற்று இடம் தருவதற்கும் வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதை, சில அரசியல் கட்சிக்காரர்கள், இரண்டு மாநிலங்களுக்கிடையேயான தகராறு என்றும், கூடலூரை வேறு ஒரு மாநிலத்துடன் சேர்க்க வேண்டும் என்றெல்லாம் கூட சிலர் சொல்லி வந்தார்கள். ஏதோ, திராவிட முன்னேற்றக் கழக அரசை யார் எதிர்த்தாலும், எந்த நிலையில் எதிர்த்தாலும் கவலை இல்லை. அந்த எதிர்ப்பு கோஷ்டியுடன் சேர்ந்து கொள்வது என்பது நல்லதல்ல. இந்த அரசுக்கு எதிராகக் கோஷத்தை கிளப்புவது என்பது இந்த மாநிலத்திற்கு எதிராகக் கிளப்பப்படுகிற கோஷமாகும் என்று கருதுகிறேன். எனவே, இந்த அரசுக்கு எதிராக எழுப்பப்படுகிற எந்த கோஷத்திற்கும் ஆதரவு அளிப்பது என்ற மனவளத்தை எந்தக் கட்சிக்காரர்களும் வளர்த்துக்கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொண்டு, இங்கே எடுத்துச்சொல்லப்பட்ட பல ஒத்திவைப்புத் தீர்மானங்களின் பேரில் அளிக்கப்பட்ட விளக்கங்களுக்குப் பிறகு அவைவை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்தை தலைவரவர்களுக்குத் தாழ்மையுடன் எடுத்துக்கூறி அமைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒற்றிவைப்புத் தீர்மானங்களுக்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இந்தத் தீர்மானங்களுக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஆ) பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் மீது காவல் துறையினர் எடுத்த நடவடிக்கையும், கல்லூரி மூடப்பட்டதும் குறித்து.

MR. SPEAKER: I have also received notice of an adjournment motion from Thiruvalargal S. Alagarswamy and S. Mohammed Khader Mohideen with regard to the police action on the students of the St. Xaxier's College, Palayamcottai, and the closure of the college. I request the hon. Members to explain briefly how this comes under the purview of adjournment motions.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் தங்களுக்குச் சங்கம் வேண்டும் என்று தெரிவித்த கோரிக்கை நியாயமான கோரிக்கை. ஆனால் அங்கே உள்ள கல்லூரியை நடத்துகிற கல்லூரி முதல்வர் அதற்கு அனுமதி அளிக்கவில்லை. ஆகவே, அங்கே மாணவர்கள் கிளர்ச்சி நடத்தினார்கள். நியாயமான கோரிக்கையை முன் வைத்து கிளர்ச்சி நடத்திய காலத்தில் அந்தக் கல்லூரியை மூடி விட்டார்கள். போலீஸ் தலையிட்டு மாணவர்களை அடித்து நொறுக்கிய காரணத்தால் அவர்கள் காயம் அடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த மாதிரி காரியங்களில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மாணவர்களின் நியாயமான உரிமைகளை வழங்க கல்லூரி முதல்வர் மறுத்தால் அவர்களைக் கண்டித்து செயல்பட வேண்டிய, மாணவர் சார்பாக இருக்க வேண்டிய, அரசாங்கம் இதில் தவறிவிட்டது. எனவே, அங்கே நடந்த கொடுமையைப் பற்றியும், என்ன நடவடிக்கை இனி எடுக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை கொடுத்திருக்கிறேன்.

1971 அக்டோபர் 23]

திரு. எஸ். முகமது காதர் முகைதீன் : தலைவரவர்களே, பாளையங்கோட்டை செயின்ட் சேவியர் கல்லூரி மாணவர்கள் தங்களுக்கு ஒரு சங்கம் ஏற்பட வேண்டும் என்று கல்லூரியின் முதல்வரைக் கேட்டார்கள். ஆனால் அந்தக் கல்லூரி முதல்வர் அந்தக் கோரிக்கையை மறுத்து, கல்லூரியில் சங்கம் வைக்க வேண்டுமென்ற சூழ்நிலை ஏற்பட்டால் அந்தக் கல்லூரியையே மூடிவிடுவேன் என்று கூறுகிறார்கள். அந்தக் கல்லூரியை மீண்டும் எப்படியாவது திறந்துவிட வேண்டும் என்று நெல்லை மாநிலத்திலுள்ள சர்வ கட்சியினரும் அந்தக் கல்லூரியின் முதல்வரைக் கேட்டபோதும் அவர்கள் அதற்கு இசைய மறுத்து விட்டார்கள். ஆகவே, இதைப்பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைக்குமாறு அனுமதி கோரி இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பாளையங்கோட்டையிலே உள்ள செயின்ட் சேவியர் கல்லூரி தனியார் நிர்வாகத்தால் நடத்தப்பட்டு வருகிறது. நீண்ட காலமாகவே மாணவர் பேரவை அக்கல்லூரியில் அமைக்க அனுமதியில்லாமலேயே நடைபெற்று வருகிறது. இதுவரையில் மாணவர் பேரவையை அமைப்பதற்குக் கல்லூரி முதல்வரும் நிர்வாகிகளும் அனுமதிக்கவில்லை. ஆனால் மற்ற எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர் பேரவைகள் உள்ளன. அங்கெல்லாம் பேரவைத் தலைவர்களை மாணவர்கள் தேர்ந்தெடுப்பது உண்டு. சில கல்லூரிகளில் வகுப்புத்துறைகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சேர்ந்து அமைப்பதும் உண்டு. தனியார் கல்லூரிகளான லயோலா காலேஜ் போன்றவற்றிலும் இந்தமாதிரி முறை தொடர்ந்து நடைபெறுகின்றது. மற்ற கல்லூரிகளில் இருக்கின்ற மாணவர்களுக்குள்ள அந்த அந்த உரிமையைத் தான் தங்கள் கல்லூரிக்கும் வேண்டுமென்று தான் மாணவர்கள் கேட்டுக்கொண்டு வந்தார்கள். அந்தக் கோரிக்கையைக் கல்லூரி முதல்வர் ஏற்றுக் கொள்ளாமலேயே இருந்து வந்தார்.

கடந்த 5—10—1971 அன்று அந்தக் கல்லூரி மாணவர்கள் எல்லாம் சேர்ந்து அக் கல்லூரியின் முற்றத்தில் நின்றுகொண்டு, கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கோஷம் எழுப்பிக்கொண்டிருந்தார்கள். கல்லூரி முதல்வர் கோரிக்கைக்கு இணைந்து வரவில்லை. 7—10—1971 அன்று சுமார் 1,000 மாணவர்கள். அந்தக் கல்லூரியின் முன்னால் கூடி நின்று கோரிக்கை பற்றிய முழக்கங்களை எல்லாம் எழுப்பி, இதற்கு கல்லூரி முதல்வர் இணங்க வேண்டும் என்று கிளர்ச்சி செய்ய ஆரம்பித்தார்கள். மாணவர்கள் வன்முறையில் போகக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆகவே, கல்லூரியின் உடமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற முறையில் கல்லூரியின் முதல்வர் எழுத்து மூலமாக மாவட்டக் காவல் துறைத் தலைமை அதிகாரிக்கு, தங்களுக்கு காவல் துறையினரின் பாதுகாப்பு வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் பேரில் மாவட்டக் காவல் துறைத் தலைமை அதிகாரி—சூபரிண்டெண்ட் ஆப் போலீஸ் அவர்களும், மற்ற அதிகாரிகளும் கல்லூரியில் சென்று பாதுகாப்பு அளிக்கின்ற முயற்சியில் ஈடுபட்டார்கள்.

போலீசார் தானாக கல்லூரிக் காம்பவுண்டிற்குள் செல்லக் கூடாது. கல்லூரித் தலைவர் காவல் துறையினரின் துணை தேவை என்று கேட்டால், காவல் துறையினர் பாதுகாப்பு அளிக்க வேண்டிய கடமை இருக்கிறது. இந்த

விவகாரத்தில் கல்லூரி முதல்வரே எழுத்துமூலம் கேட்டுக்கொண்ட காரணத்தால் எஸ். பி. அங்கே போய் முதல்வர் அவர்களுடனும், மாணவர்களுடனும் பேசி சுமுகமான நிலை ஏற்பட வாய்ப்பு இருக்கிறதா என்று முயன்றிருக்கிறார்கள். மாணவர்கள் அப்போதும், நாங்கள் சாதாரண, மற்றக் கல்லூரிகளில் இருக்கும் படியான பேரவையைத்தான் அமைக்க வேண்டும் என்று கேட்கிறோம், இந்த அனுமதியைக்கூட மறுக்கிறார்கள் என்று சொன்னார்கள். இந்த நியாயமான கோரிக்கையை முதல்வரிடத்திலே விவாதித்த போதும் முதல்வர் கடைசி வரை இணங்க மறுத்து விட்டார். மாணவர்கள் தங்களுடைய கிளர்ச்சியைக் கைவிடும் நிலையில் இல்லை. இப்படி சில பல மணி நேரங்கள் பேச்சு வார்த்தையின்போது அமைதியான நிலை இருந்தது. அதற்குப் பிறகு போலீஸ் பாதுகாப்பையும் மீறி 200-க்கு மேற்பட்ட மாணவர்கள் உள்ளே புகுந்து அங்கே படித்துக் கொண்டிருந்த மாணவர்களையும் நிர்ப்பந்தமாக வெளியே வரச்சொல்லும் செயலும், அவர்களை வெளியே பிடித்து இழுத்து வரும் செயலும் நடந்தது. காவல்துறை அதிகாரி, மாவட்ட ஆட்சித் தலைவர் அறிக்கையின்படி அப்போது கண்ணாடி ஜன்னல்கள் உடைக்கப்பட்டன, விளக்குகள் குழாய்கள் உடைக்கப்பட்டன, சில சாமான்கள் சேதமாக்கப்பட்டன, நாற்காலிகள் தூக்கி எறியப்பட்டன, போலீசார் மீது கல்லெடுத்து எறியப்பட்டது; 13 போலீசாருக்குக் காயம் ஏற்பட்டது; ஒரு போலீஸ்காரருக்குத் தலையில் பலத்த அடி, அதற்குப் பிறகு சொண்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் உத்தரவின் பேரில் பிரம்படி லத்தி சார்ஜ் அல்ல கேன் சார்ஜ்தான் தரப்பட்டிருக்கிறது. பிரம்படி கொடுக்கப்பட்டபோது மாணவர்கள் கலைந்து செல்கிறபோது கம்பிகள் போட்ட வேலியைத் தாண்டியவர்கள் விழுந்த காரணத்தால், ஏழு மாணவர்களுக்குக் காயங்கம் ஏற்பட்டிருக்கின்றன. அதற்குப் பிறகு கல்லூரியை மூடிவிட்டார்கள். கல்லூரி மூடப்பட்ட பிறகு வன்முறை எதுவும் இல்லை.

அதற்குப் பிறகு செயின்ட் ஜான் கல்லூரி, இந்துக் கல்லூரி மாணவர்கள் ஊர்வலமாகச் சென்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் குழுமி தங்களுடைய ஆதரவைத் தெரிவிக்கும் விண்ணப்பத்தைத் தந்தார்கள்.

பாளையங்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர், நகராட்சி மன்ற உறுப்பினர், நகர முக்கியஸ்தர்கள் அவ்வளவு பேரும் சேர்ந்து சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டு மாணவர்கள் கல்லூரிக்குச் சென்று படிப்பில் கவனம் செலுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கல்லூரி முதல்வரைச் சந்தித்து வாதாடியிருக்கிறார்கள். கல்லூரி முதல்வர், பேரவைக்கு இடம் தர மாட்டேன் என்று பிடிவாதமாக மறுத்திருக்கிறார். மாணவர்களைத் தானே சமாதானப்படுத்திக் கொள்கிறேன் என்றும் சொல்லியிருக்கிறார். கல்லூரி சுமுகமாக நடைபெறும் என்றால், தங்களுக்கு அதிலே ஆட்சேபணை ஒன்றும் இல்லை என்று இவர்கள் கூறி இருக்கிறார்கள்.

அந்தக் கல்லூரி ஒரு கத்தோலிக் இன்ஸ்டிட்யூஷன். அந்தக் கல்லூரி முதல்வர், பேரவை அமைக்க இடம் கொடுக்கக்கூடாது என்பதற்கு பிஷப்பின் சம்மதத்தைப் பெற்று கடைசி வரை மறுத்து வந்திருக்கிறார்.

இப்போது கல்லூரிக் கல்வி இயக்குநரைக் கொண்டு சமாதான சூழ்நிலை ஏற்படுத்த முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. செயின்ட் ஜான் கல்லூரி, செயின்ட் ஜோசப் கல்லூரி போன்ற கத்தோலிக்கக் கல்லூரிகளிலேகூட

மாணவர் பேரவை அமைக்க அனுமதி தந்திருக்கும்போது, செயின்ட் சேவியர் கல்லூரியில் அதற்கு அனுமதி தர மறுக்கக்கூடாது. நேரடித் தேர்தல் வைத்தால் மாணவர்களுக்கிடையே கலகம் வரும் என்ற நிலை இருந்தால் இண்டைரக்ட் எலக்ஷன் வைத்துக் கொள்ளுவதற்குக்கூட மாணவர்கள் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வகுப்பில் இருக்கும் பிரதிநிதிகள் எல்லோரும் சேர்ந்து பேரவையை அமைத்துக் கொள்ள மாணவர்கள் ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து. இதை எல்லாக் கல்லூரிகளிலும் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு மாணவர்களுக்கு உரிமை கொடுத்து நல்ல முறையில் தீர்வு காண வேண்டுமென்ற நோக்கத்துடன் கல்லூரிக் கல்வி இயக்குநர் இந்தப் பிரச்சினையிலே கவனம் செலுத்தி வருகிறார். அந்த முதல்வர் இரண்டு நாட்கள் அவகாசம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். இதிலே முதல்வர் அவர்களுடைய பதில் இரண்டு நாட்களில் தெரிந்தவுடன் அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து இதிலே சுமுகமான முடிவு ஏற்பட வழி செய்யும். இப்போது அங்கே அமைதியான சூழ்நிலை நிலவி வருகிறது. ஆகவே, இப்போது அதைப்பற்றி இந்த அவையிலே விவாதிப்பதால் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதிலே வழி ஏற்பட்டுவிடாது. அரசு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட தக்க முயற்சிகளை எடுத்துக் கொண்டிருப்பதால், இதிலே ஒத்தி வைப்புப் பிரேரணைக்கு இடம் இல்லை என்று கூறி அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானங்களுக்கு அவசியமில்லை என்ற காரணத்தால் இந்தத் தீர்மானங்களுக்கு அனுமதி தர மறுக்கிறேன்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) ஓர் உறுப்பினர் கொடுத்திருந்த கவன ஈர்ப்பு தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது குறித்து

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Before the Hon. Speaker goes to the next item of business in the agenda, I would like to draw the attention of the House, with the permission of the Hon. Speaker to the following very important matter.

I gave notice under Rule 41........

MR. SPEAKER: The hon. Member will have to give notice for raising this matter......

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரொம்ப நாட்கள் இந்த மன்றத்திலே உறுப்பினராக இருந்திருக்கிறார்கள். திடீரென்று 41-வது விதியின்படி அவர்கள் பிரச்சினையை எழுப்ப முடியாது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Please hear me, then you can know what I am going to say and then you can give me a reply.

MR. SPEAKER: The hon. Member must get the consent of the Speaker before raising the matter.